[17th September 1958

Sri K. ANBAZHAGAN : கட்ட பொம்மன் அவர்களுடைய பெரும் தொண்டைப்பற்றியும், தியாகத்தைப்பற்றியும் பல விதமான கருத்து வேறுபாடுகள் நாட்டில் உலாவி வருவதாக இருப்பதன் காரணத்தால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு குழுவை அமைத்து அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த ஆராய்ச்சி குழு முடிவு செய்ததைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேறு ஒரு குழுவை அமைக்கும் படியாக இருக்கலாம். ஏனென்றால் அதைப்பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் வரலாம். இப்படி ஆராய்ச்சி குழு ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும். அதனால் இதைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

Sri K. VINAYAKAM : Sir, since the amount paid to the surviving descendants of Sri Kattabomman is tantalisingly negligible and paltry, will the Government think of the possibility of increasing it and also calling it not a ' compassionate allowance ' but a ' deserving grant '?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, even this allowance will be stopped after the life-time of the present recipient and I do not think that we should go on undertaking liabilities based on past services and ancestral rights.

Homœopathy

* 232 *Q*.—Srimathi T. N. ANANDANYAKI and Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) what the Diploma usually awarded for those who pass examination in Homoeopathy medicine is;

(*b*) whether those who are qualified in Homœopathy can call themselves as Doctors;

(*c*) whether the Government are aware of the fact that many persons after having taken postal tuition in Homœopathy affix Doctor before their names; and

(*d*) if so, the action proposed to be taken by the Government to stop this practice?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Homœopathic system of medicine has not yet been recognized by this Government. The question of granting any diploma to those who pass the examination in the system does not therefore arise.

(*b*) & (*c*) The use of the title ' Dr. ' by practitioners of any system of medicine is not statutorily prohibited.

(*d*) Does not arise.

* 233 *Q*.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) whether the Government are aware of the fact that many so-called doctors of medicine in homœopathy are practising without proper qualification and training; and

(*b*) if so, the action proposed to be taken by the Government to stop such practices?

17th September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Homœopathic system of Medicine has not yet been recognized by this Government and as such the question of taking any action does not arise.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware of the fact that the lives of many persons are put in danger because of these self-styled quacks?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, this Homœopathic system of treatment is simple though it takes a long time to cure the disease; I do not think that it would have caused any danger to lives.

SRIMATHI T. N. ANANDANAYAKI : ஐந்து வருஷங்கள் மருத்துவக் கல்லூரியில் படித்துவிட்டு டாக்டர் பட்டம் பெற்றவர்களும், மருத்துவர் கல்லூரியின் நிழலிலேயே கூட ஒதுங்காத சிலரும் டாக்டர் என்று பெயர் வைத்துக்கொண்டு இருப்பதால் மக்களிடத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவாரா ? அந்தக் குழப்பத்தின் காரணமாக பல உயிர்கள் பலியிடப்படுவதை அவர் உணருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது இருக்கிற இந்திய மெடிகல் டிக்கிரீஸ் ஆக்ட் பிரகாரம் அது முடிந்துவிட்டவுடன் டாக்டர் என்று பட்டம் வைத்துக்கொள்வது இல்லை. ஆனால் இந்த முறையில் அநேகம் உயிர்கள் பலியிடப்படுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

SRI K. ANBAZHAGAN : இந்த ஹோமியோபதி மருத்துவ முறையில் மூளை கோளாறுபட்டவர்களுக்கும் மனோ அமைதி இழந்தவர்களுக்கும் சில மருந்துகள் இருக்கின்றன என்பதையும் பல வைத்திய வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட மருந்துகளை அதிகமாக மக்கள் அறியும்படி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ?

MR. SPEAKER : குறிப்பிட்ட இந்த இரண்டு வியாதிகளுக்கு மாத்திரம் தானா ? எல்லாவற்றிற்கும் தான்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த முறை பிரகாரம் இதில் குணமாகிறதோ இல்லையோ, ஒன்றும் கெடுதி ஏற்படுவதற்கு இடமில்லை.

• • • • •

Planning Board, Madurai

* 234 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எல்லா ஜில்லாக்களிலும் புதியதாக ஜில்லா அட்வைசரி கமிட்டிகள் ஸ்தாபித்திருக்க மதுரை ஜில்லாவில் மட்டும் பழைய ப்ளானிங் போர்டே இன்னும் வேலை செய்துவரக் காரணம் என்ன ?

(ஆ) புதிய அமைப்பு அமைக்கும்படி தனக்கு உத்தரவு வரவில்லையென மதுரை ஜில்லா கலெக்டர் கூறுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) புதிய அட்வைசரி கமிட்டியின் அதிகாரங்கள் என்ன ?

* Expunged on a motion adopted by the House.